# சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி

(தன்னாட்சி)

ரஹ்மத் நகர், திருநெல்வேலி – 627 011

(தேசியத் தர மதிப்பீட்டுக் கல்விக்குழுவின் மறுமதிப்பீட்டில் 3.40/4.00 மதிப்பெண்ணோடு 'A' மதிப்பீடு அளிக்கப்பட்டது; சர்வதேசத் தரச் சான்றிதழ் ISO : 9001:2008 பெற்றது.)



பல்கலைக்கழக நிதிநல்கைக்குழுவின் தன்னாட்சி நிதியில் தமிழ்த்துறை நடத்தும்

## தமிழ் இலக்கியத்தில் தன்னம்பிக்கைச் சிந்தனைகள்

தேசியக் கருத்தரங்க ஆய்வுக்கோவை

# தன்னம்பிக்கைத்தமிழ்

## தமிழ்த்துறை வெளியீடு

27.09.2016

Scanned by CamScanner

## 'இளையார் ஆத்திசூடி' - இயம்பும் சிந்தனைகள்

முனைவர் ச. அ.
கஜா,
உதவிப்பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
பாத்திமா கல்லூரி, மதுரை.

ஒவ்வொரு எழுத்தாளனும் தான் வாழுகின்ற சமுதாயத்தின் தாக்கத்தைத் தன் எழுத்தில் வெளிப்படுத்துகிறான். கால ஓட்டத்தில் மனிதன் தகுதியின் மிகுதியால் மாறிவருகின்றான். ஆக்கலும், அழித்தலும், புறக்கணித்தலும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இத்தொடர்ச்சிகளைத் தன் எழுத்தில் கொண்டு வந்தவர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். தான் எழுதுகின்ற, காணுகின்ற ஒவ்வொரு பொருளிலும் புரட்சியை விதைத்தவர் புரட்சிக்கவி. அவர் சோலைகளைக் காணும் பொழுதும் அழகில் மயங்கி மிகையுடன் பாடாமல் அதன் பின்னால் வியர்வை சிந்தியோரின் வேதனையை எண்ணிப் பார்க்கிறார்.

"சித்திரச் சோலைகளே - உமைநன்கு
திருத்தஇப் பாரினிலே - முன்னர்
எத்தனைத் தோழர்கள் ரத்தம் சொரித்தனரோ
உங்கள் வேரினிலே"

என்று பாடுகிறார். இதுவே இவரின் தனித்தன்மை. தமிழ்ச் சமுதாயம் உயர்வதற்கும், தமிழ்மொழி உயர்வடைவதற்கும், தமிழர் தலை நிமிர்ந்து நின்றிடுவதற்கும் பாவேந்தர் படைத்த நூல்கள் பல. அவர் நூல்கள் யாவும், பாடிய செய்யுட்கள் அனைத்தும் புரட்சிப்பாக்களே. 'ஆய்ந்துபார்' என்ற நூலின் கட்டுரையுள் மனிதர்களுக்குத் தன்னம்பிக்கை ஊட்டும் விதைகளை விதைத்துள்ளார். இந்நூலில் 'எவனொருவனுக்குத் தன்னம்பிக்கை இல்லையோ அவன் வளர்வதும் இல்லை உயர்வதும் இல்லை. எந்த ஒரு செயலைச் செய்வதற்கும் தன்னால் முடியும் என்று தன்னம்பிக்கையோடு தொடங்குவதுதான் நன்மையாய் இருக்கும்' என்கிறார்.

ஔவையார், பாரதியார் போன்றோரின் தாக்கமும் தூண்டுதலும் இவரை எழுதத் தூண்டின. அவர்களைப் பின்பற்றி பாரதிதாசன் ஆத்திசூடி, இளையார் ஆத்திசூடி என்ற இரு நூல்களை எழுதி உள்ளார். அவற்றுள் தனிமனிதப் பண்புகளையும், சமுதாய உணர்வுகளையும் மிகுதியாகக் கூறியுள்ளார்.

"மூப்பினுக்கிடங் கொடேல்; மிதியடியோடு நட;
வேளையோடு ஆர உண்; காற்றினைத் தூய்மை செய்;
தீங்கனி வகை விளை; தெருவெலாம் மரம் வளர்;

எனச் சுற்றுப்புறச் சூழலையும், தூய்மையையும் தன் பாடல்கள் வழி வெளிப்படுத்துகின்றார். 1963-ல் இளையார் ஆத்திசூடி என்ற நூலை இயற்றினார். முன்னயது வயது முதிர்ந்தோருக்கும், பின்னையது இளையவர்களாகிய மாணவர்களுக்கும் பயிலும் வகையில் அமைத்துள்ளார்.

"இளையார் ஆத்திசூடி இயம்பக்
களையார் தமிழ்த்தாய் கருத்தில் அமைகவே"

Scanned by CamScanner